உ

கற்புவிளக்கம்.

தயாவிருத்திப் பரிபாலனம்,

தே. அ. சாமிகுப்புசாமி யவர்கள்

இயற்றியது.

சென்னை,

ஜீவகாருண்யவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1917 ௵.

விலை அணா 3.

தபால் சார்ச்சுப் பிரத்தியேகம்.

230/1917

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 19 APR 1917 MADRAS

R41 N17 122870

ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணேநம:

கற்பு விளக்கம்.

இது

திருத்துருத்தி-இந்திரபீடம்

ஸ்ரீ கரபாத்திரஸ்வாமிக ளாதீனம்

ஈசூர் - ஸ்ரீசச்சிதாநந்தஸ்வாமிகள் திருவடித்தொண்டர்

39-வதுபட்டாளம் சுபேதார் மேஜராயிருந்த

ஆத்மஞானி

ஸ்ரீ அய்யாக்கண்ணு தேசிகமூர்த்திகள்

மாணவருளொருவராகிய,

தே. அ. சாமி குப்புசாமி அவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை, ஹிந்துதியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்

வேதாந்த தர்க்க போதகாசிரியருமாகிய

மகாவித்வான்,

ஸ்ரீமத் - கோ. வடிவேலுசெட்டியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

புராணிகர், சரசவாணி

கா. இ. சிதம்பரசாமிபாண்டியர்

அவர்களால்,

சென்னை

ஜீவகாருண்யவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1917. [அணா-3.

REGISTERED COPY RIGHT.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

சாத்துகவிகள்.

காஞ்சீபுரம்

ஸ்ரீமத் - நிச்சல - இராமாநந்த சுவாமியவர்களருளிய

எழுசீர் விருத்தம்.

சீர்பெறு கொழுநர்த்தெய்வமென் றேத்திச்சிறந்திடு மங்கையர் நெறியைத், தேர்பெறு கற்பு விளக்கமென் றொருநூற் றெளிவுறத் தந்தன னுயிர்க்கிங், கோர்பெறு கரபாத் திரன்மர போங்க விலங் கையாக்கண்குரு வருளாற், றூர்பெறுதேனம் பேட்டைவாழ் புலவன் சாமிகுப் புசாமியென் பவனே.

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

சிவஸ்ரீ - கலியாணசுந்தரயதீந்திர சுவாமியவர்களருளிய

அறுசீர் விருத்தம்.

பொற்புடைய மாதரெலாம் புண்ணியத்தின் பாலெய்திப் பொலிவுகொள்ளக், கற்புவிளக் கப்பனுவற் சொற்றிட்டான் கவிஞரெலாங் களித்தற் கேற்ற, சொற்பொலியு முதற்பாவால் கருணையொரு வடிவான சுகிர்தம் வாய்ந்த, சற்புருட னனதானஞ் செயும்வள்ளற் சாமிகுப்பு சாமி-மாதோ.

ஸ்ரீ - சச்சிதாநந்த சுவாமியவர்களின் மாணவர்

வேதாந்த ரத்நாகரம்

ஸ்ரீமத் - பி. ஆறுமுக முதலியாரவர்களியற்றிய

வெண்பா.

அற்ப விளக்க மவல மவலமென்றே
கற்பு விளக்கங் கழறினனல்—பொற்புமிகு
சாமிகுப்பு சாமியெனுந் தக்க மதிப்புலவ
னமிதெவர்க் கும்பெரிதென் றுய்ந்து.

சென்னைப் பச்சையப்பன் கல்வி விசாரணைக் கலாசாலைத்

தமிழ்ப்புலவர் - கிருஷ்ணாம்பேட்டை

ஸ்ரீமத் - ஆ. சிங்காரவேலு முதலியாரவர்களியற்றிய

அறுசீர் விருத்தம்.

குலமறிந்து தமதொழுக்கங் கொழுநர்வழி யொழுகலெனக் குறித்துக் கூறும், கலைமகளுங் களிப்புறுகற் பொழுக்கமெனுங் கவி பகர்ந்தான் கவிஞ ரேத்தும், மலைமகளை யொருபுறத்து மணந்தவ

னல் லடிமறவா மாண்பி னல்லோன், அலைமகளும் புகழ்சாமி குப்புசா மிப்பெயர்கொ ளறிஞ ரேரே.

சைவசித்தாந்த மகாசமாஜ கௌரவ காரியதரிசி

ஷிபேட்டை. ஸ்ரீமத்-குப்புசாமிமுதலியாரவர்களியற்றிய

கட்டளைக் கலித்துறை.

மாணிக் கனக பதமலர் தந்தா னடிமறவா
மாணிக் கனசொன் மடந்தையர் கற்பி னடைவிளக்கம்
மாணிக் கனகம் புரைமேனி மால்குப்பு சாமியென்பான்
மாணிக் கனகர் மகிழ வுரைத்தனன் மாண்புறவே.

சிவரகசியப் பதிப்பாசிரியர்,

ஸ்ரீமத்-க. சதாசிவசெட்டியார் B-A-அவர்கள் எழுதிய

வசனம்.

ஸ்ரீமாந்-தே. அ. சாமி குப்புசாமி யென்பவர் வரவிட்ட "கற்புவிளக்கம்" என்னும் மகுடம்புனைந்துசதவெண்பாக்களால் அமைத்துச்செய்த புத்தகம் பார்க்கலாயிற்று. அதன்கண் அமைந்துள்ள விஷயம்யாவும் சிரமமின்றி யாவரும் எளிதின் விளக்கிக்கொள்ளக் கூடியனவும் விஷயத்திற்கு ஆவசிகமானவுமா யிருத்தலின் நூலாசிரியருடைய சிரமம் மிக்க பயன்றரத்தக்கது. கற்புவிளக்கமெனவே இது பெண்பாலார்க்கே வேண்டியதாம் என எண்ணக்கூடியதன்றுய் வெள்ளறிவினராய்த் தம்மில்லக் கிழத்தியர்களைக் குறிகேட்பித்தும் பேயாட்டுவித்தும், புரைநெறியிற்செலுத்தும் ஆண்பாலார்க்கும், பெரிதும் பயன்படக்கூடிய புத்தகமாம்,இல்லறதருமத்தை இனிது நடத்த வெண்ணும் தம்பதியர்களுக்கு அவ்விருவருந் தனித்தனி செய்ய வேண்டும் அறங்களை விளக்கிக்காட்டும் நூலுமாம். பரோபகாரமாய் இந்நூலை யாக்கிய காரணத்தால் இவர்க்கு எம்வந்தனம் உரியதாகின்றது.

சென்னை - ஸ்ரீ கச்சபேசுவரஸ்வாமி தேவஸ்தான டிரஸ்டியும்

ஸ்ரீ கந்தசுவாமிகோவில் தர்மகர்த்தருமாகிய

ஸ்ரீமத்-ப. இரத்தினசபாபதி செட்டியாரவர்கள் எழுதிய

வசனம்.

கற்புவிளக்கமெனும் இந்நூல் நம் சகோதரிகள் ஒவ்வொருவரும் பொற்புண்டாகக் கற்கவேண்டியதொன்று, கற்றவண்ணம் அவர் நிற்றலே நம் சுதேசம் சதுர்வித புருஷார்த்தத்தினும் சதுரப்பாடுறுதற்குக்காரணமாகும்.நம்நாடுபலநலனும் பண்புறப்பெறுதற்கு நம்பெண்ணினல்லாரேமுக்யகாரணமாவர்.சுதேசாபிவிர்த்திக்குழைக்கும்நேயர்பலர்க்கும் இந்நூலிற்கூறியகற்பிலக்கணத்துறை

பலவும் கடைப்பிடிக்க நம்காரிகைநல்லார்க்குப் போதிப்பது கடமை. கேடில்விழுச்செல்வமாம் கல்வியும்பதிபத்தியும், தற்காத்துத் தகைசான்ற சொற்காத்தலும், அற்ருர் அழிபசிமாற்றலும் ஆகிய மனோமாட்சியே இப்பனுவல்துணிபு. நமது வாழ்க்கைத்துணைவியர் இப்பெருஞ் சிறப்புறின் இத்தேயத்துக்கு இல்லதென்? அவர்மாண்புற முன்னூற்கும் பின்னூற்கும் முரணாத நன்னூலாம் இதையருளிய நம் சாமிகுப்புசாமிக் குரிசிற்குநந்தமிழ்நாடு என்னுற்றுங் கொல்லோ!

I have glanced through the work named "**Karpu Vilakkam.**" It is written in an easy and flowing style. SWAMI KUPPUSWAMI's knowledge of the Tamil Standard works on "**Karpu**" is admirable. He has put the whole thing into a nut shell and the Tamil knowing people are of course grateful to him for this and other similar works which he has added to the Tamil literature.

K. GOVINDASWAMI MUDALIAR,
Head Accountant, Madras G. P. O. &
Member
Sri Sadhu Ratna Vedanta Sabha.

MADRAS,
11th Feb. 1917.

சென்னை-வேப்பேரி லண்டன்மிஷன் பெண்டிக்கரல்ஸ் ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத் - கொ. இராமலிங்கத் தம்பிரா னவர்களியற்றிய

அறுசீர் விருத்தம்.

முன்னூற்கள் பலபலவா விதந்தோது கற்பினியன் முழுதுஞ் சேர்த்துத், தன்னூலி லெவ்விதயு மிகவெளிதி லாய்ந்துணரத் தந்தான் மன்னே, நன்னூலி தெனவெவருங் கொளக்கற்பு விளக்கமெனு நாமத் தானே, பன்னூற்செந் தமிழ்க்கவிஞன் சாமிகுப்பு சாமியெனும் பாவ லோனே.

திருமயிலை - செந்தோம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத்-ம. செல்வநாதமுதலியாரவர்களியற்றிய

எழுசீர் விருத்தம்.

கற்புமலர்க் குழன்மடவார் மனையறத்திற் றங்கொழுநர் களிகூரப் புவிவியக்கக் கருதிநாளுங், கற்புநெறி தனிற்பிறழா தொழுகுதற்கோர் கருவிபோன்று கரதலத்தி லாமலகக் கனிய'தாகப், பொற்புநிறை கவிஞர்பல வகுத்துரைத்த வெண்ணிலாத புராதன காவியங்களற நூற்பகுப்பி, லற்புதமோ டமைந்தவிய லனைத்துமொன்ருய்த்திரட்டியணிகற்புவிளக்கமெனவொருநூற்செய்தான்.

விண்ணியலுங் கார்முகிலு முடல்விளர்ப்ப வரம்பிலாமல் வேண்டுவன பாவலர்கட்களிக்குமேலோன், கண்ணியஞ்சே ரத்துவித நற்சமயநூலினுர்ந்தகனபொருடேர்ந்தகமகிழுங்காட்சிமிக்கோன், உண்ணியசட்சுவையமைய வுயரமுத தானந்தன்னே யுஞற்றுவதே யுறுதியெனத் துணிந்தசீலன், தண்ணியலுஞ்செவ்வாத்தித்தாரணிந்தகீர்த்திவாய்ந்தோன்சாமிகுப்புச்சாமியெனுஞ்சான்றோனம்மா.

வித்வான் - சூ. அப்பன்செட்டியாரவர்கள்மாணவரும், சென்னை-சூளை, சுவாமிவிவேகாநந்தஹிந்துபாலிகாபாடசாலைத்தலைமை உபாத்தியாயருமாகிய

ஸ்ரீமத் - செ. மு. வேலுமுதலியா ரவர்களியற்றிய

அறுசீர் விருத்தம்.

ஆழியிற் றுறைப டாம லலமரு மீகா மற்கோர்
கேழ்கிளர் தூணந் தன்னிற் கெழுமியே யேற்று மாபோற்
காழ்மணி வயிரப் பூணுற் கலங்குறாஉ மடமா தர்க்கோர்
வாழியே கற்பா மிக்க வகைவிளக் கேற்றி னுனல்.

அன்னவன் பெயரைக் கேண்மோ வறைகுதுமின்னேயின்னே
சொன்னதா னங்க டம்மிற் சோர்விலாத் தான மொன்று
மன்னதே யன்ன தான மாகுமென் றுரச் செய்யும்
பன்னருஞ் சாமி குப்பு சாமியாம் பாவ லோனே.

வித்வான் - சூ. அப்பன் செட்டியாரவர்கள் மாணவரும்
ஆயுர்வேத பண்டிதரு மாகிய

ஸ்ரீமத் - மா. வடிவேலுமுதலியா ரவர்களியற்றிய

ஆசிரியப்பா.

உலகம் போற்ற வுயர்ந்தா ளவ்வை
யிலகு மொழியா லெவ்வெவ் விரிவு
முணரக் கிடக்கு மொண்ணெறி யானஃ
திணர்மல ராங்கே யியையு மதனுட்
கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை
பெற்படு கண்ணி யினைவலி யுறுத்த
வெழுந்த பாக்க ளெண்ணில வவையு
முழுந்துரு ளன்ன வொருபா லின்றிப்
பல்லிடங் களினும் படிந்து கிடத்தலி
னல்கிடா தனைத்து மொருவழி யாக்கிப்
பூமலி குழலார் பூண்டத னெறியே
காமரு தலைவர் கருத்துற நடத்தற்
காமிது வென்றே யன்னோ ரைக்கூஉய்க்
கற்பு விளக்கங் கழறின னேர்நா
லற்புறு மன்ன தான மளிப்போன்
சாமி குப்பு சாமித்
தமிழ்நா வலனுந் தண்மை யோனே.

நாகப்பட்டினம். முருகப்ப உபாத்தியாயர் மாணாக்கர்-திருவல்லிக்கேணி

ஆறுகாடு-குயப்பேட்டை, தமிழ்ப்புலவர்

ஸ்ரீமத்-நெல்லி. அப்பாசாமி உடையாரவர்களியற்றிய

வெண்பா.

கற்புவிளக் காமென்னுங் கற்பினரு மஃதிலரு
மற்புவிளக் கற்புவிளக் கஞ்சொற்ற—னற்புதமாய்
நேமிவைப்பிற் சீர்த்தி நிறையத்தே னும்பேட்டைச்
சாமிகுப்பு சாமிவள்ள றூன்.

திருமயிலை - ஓம் கணேச கந்தப்ப சபாகிருபணரும் ஷெ உடையாரவர்கள்

மாணவருமாகிய - கிருஷ்ணம்பேட்டை

ஸ்ரீமான் - இராசுகிராமணியாரவர்களியற்றிய

வெண்பா.

முத்தினத்தை முட்டையென மொய்த்தடைகொ ளன்னங்கள்
சுத்தும் வயற்சென்னைச் சூளையினில்—சித்துருவாம்
வாமிதமை யன்மனைவி வாணியருள் பெற்றுறையுஞ்
சாமிகுப்பு சாமியென்பான் றூன்.

ஆர்ந்த வனுபவமோ டன்பு மறநூலுந்
தேர்ந்த புலமைத் திறத்தினு—லோர்ந்துலகில்
கன்னியர்க ளுய்ந்திடவே கற்புவிளக் கப்பெயர்நூ
லின்னிசையாற் செய்தளித்தா னின்று.

ஐந்தியனு நாற்பொருளு மாவா வணிகொழிப்பப்
பைந்தொடியார் செய்கையெலாம் பாங்காக—மைந்துடனே
செப்பிடுமிந் நூனெறியைத் தேர்ந்தொழுகு நங்கையர்கள்
தப்பின்றி வாழ்வார் தழைத்து.

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரசுவாமியவர்கள்

மாணவர்

செந்தமிழ் இரத்தினுகரம்

ஸ்ரீமத்-வல்லை. சண்முகசுந்தரமுதலியாரவர்களியற்றிய

வெண்பா.

சொற்பிரபஞ் சம்போலத் தோன்றி மறையாத
கற்பு விளக்கங் கனிந்தளித்தா—னற்புதமாய்
நேமிகுப்புற் றூனு நிலைகுலையாத் தீரனெனுஞ்
சாமிகுப்பு சாமிவள்ள றூன்.

சென்னை-வேப்பேரி ஹைஸ்கூல்-தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத்-வல்லி-ப. தெய்வநாயகமுதலியாரவர்களியற்றிய

நேரிசை யாசிரியப்பா.

பூவான் மலிந்து பொதும்பர் சூழுந்
தேவா லயங்கள் சிறப்புடன் சிறக்க
அலர்கதிர் போல வண்டி நெருங்கும்
புலவர் திலகர் பொற்புட னமரும்
தொண்டை நாடு தோமிற் பதியெனப்
பண்டைப் பிராட்டி பகர்ந்ததை யறிவீர
அப்பதி தன்னி லமருஞ் சென்னையில்
இப்புவி தன்னி லெவ்ரும் களிக்கச்
சாமிக் குப்பு சாமிக் குரிசில்
இலக்கிய மிலக்கண மியல்வே தாந்தஞ்
சொலற்கரி தாகிய தோமில் தர்க்கம்
நலத்தகு சாத்திரம் நன்ருய்க் கற்ருேன்
கற்பவை நிற்கக் கனிவின் றவத்தால்
பொற்புற வனுபவம் பொருந்தி யுள்ளான்
வரன்முறை யெவையும் வாசித் தறிந்து
பரசிவ னுண்டெனப் பண்பிற் றேர்ந்தோன்
நல்லறந் தன்னை நடத்திக் காட்டும்
இல்லற ஞானி யிவனெனப் புகல்வார்
சோறென வந்தோர் சோரா துண்பார்
கூழென வந்தோர் குடமதிற் கொள்வார்
பணமெனப் புலவர் பரிந்து வந்தால்
கணமதிற் றந்தே கைதொழு திடுவான்
அடியரைப் பரனென வன்பாய்ப் போற்றும்
படியினி லிவனொரு பத்தனென்பார்
பன்னூன் முன்னாள் பகர்ந்தே யுள்ளான்
நன்னூ லெனக்கவி நாவல ருரைக்கக்
கற்பு விளக்கங் கழறினன் காணப்
பொற்புற வதனிற் பொருந்திய நீதி
கற்பிற் சிறந்த காதலி மார்க்கும்
பொற்பிற் பொலிந்த பொற்ருெடி யவர்க்கும்
மணமக னிருக்க மறுகே யுலவும்
குணமின் மாதர் கூட்டுற விவையும்
மணமக னொழித்த மங்கை பலர்கரும்
துணிவுட னெடுத்தே துகளற வுரைக்கும்
நடக்கு முறைமை நவையறத் தீட்டி
அடக்க முடனே யன்பிற் சொற்ருன்
பாவிற் சிறந்ததிப் பாவே
பூவிற் சிறந்தது பொற்ரு மரையே.

ஆங்கிலோ இந்திய வைத்தியர்

ஸ்ரீமத் - அ· பெரியசாமிமுதலியாரவர்களியற்றிய

வெண்பா.

குன்ருக் குணச்சாமி குப்புசா மிப்பெயரா
னன்ரு வெவர்க்கு நலமமையப்—பொன்ருத
கற்பு விளக்கநூல் கண்டென்னச் செப்பினனு
லற்புமுறை கண்டுணர வாய்ந்து.

அந்நூல் படித்திடுவா ரன்ன நெறியொழுகித்
தந்நூலே யோதுதற்குச் சார்ந்திடுவா—ரெந்நூலாங்
கற்பு விளக்கமெனக் காதலிப்பார் காரிகையார்
பொற்பாக நிற்கப் புரிந்து.

சென்னை-முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்புலவர்
மணிமங்கலம்

ஸ்ரீமத் - திருநாவுக்கரசுமுதலியாரவர்களியற்றிய

கட்டளைக் கலித்துறை.

தேனிற் சிறந்த செழுந்தமிழ் நூலின் றிறந்தெளிந்து
கானிற் சிறந்த வமிழ்தெனக் கற்பின் விளக்கமதை
யூனிற் சிறந்த சுவைக்கூ ழெவர்க்கு முவந்தளிக்குங்
கோனிற் சிறந்தசு வாமிகுப் புச்சாமி கூறினனே.

ஷெ முதலியாரவர்கள் மாணவர், பாரிப்பாக்கம்

ஸ்ரீமத் - கண்ணப்பமுதலியாரவர்களியற்றிய

கட்டளைக் கலித்துறை.

தேனுறு பாலெனச் செம்புகழ் வாய்ந்த செழுந்தமிழின்
வானுறு நூற்களின் வண்பொரு ளாய்ந்த வளமையினன்
கானுறு பூங்குழ லார்க்கமை கற்பு விளக்கமெனத்
தானுறு நூலுரைத் தான்சாமி குப்புச்சு வாமியனே.

காஞ்சி மகாநாட்டு வித்தியாப் பிரசாரகர் வண்ணக்களஞ்சியம்

ஸ்ரீமத் - காஞ்சி. நாகலிங்கமுதலியாரவர்களியற்றிய

அறுசீர் விருத்தம்.

சிவங்காட்டும் பெண்மணிகள் சிறப்பெய்தி மங்கலத்தின் சீர்த்தி மேவப், பவங்காட்டும் வினையொழியப் பலதுறையிற் பன்னூலும் பயின்றுவந்து, தவங்காட்டு மனதானஞ் செய்துவக்குஞ் சாமிகுப்பு சாமி நல்லோன், நவங்காட்டுங் கற்புவிளக் கப்பனுவல் ஞாலத்தி னவின்றான் மாதோ.

சைவப்பிரசாரகர்

ஸ்ரீமத் - திருமயிலை-சோமசுந்தர முதலியாரவர்களியற்றிய

அறுசீர் விருத்தம்.

பூமணக்கு மணிமாட மேனிலையிற் புயனிலவும் பொற்பு வாய்ந்த
தேமணக்குந் தேனைவளர் சாமிகுப்பு சாமியெனுஞ் செம்மலாகும்

பாமணக்கும்புலவனவன்வேதாந்தநூல்வல்லோன்பாவல்லோர்கள்
நாமணக்கவருகற்புவிளக்கமெனநூலொன்றைநவின்றிட்டானல்.

சென்னை-முத்தியாலுபேட்டை

ஸ்ரீமத்-வா. ஆறுமுகசெட்டியாரவர்களியற்றிய

வெண்பா.

உலகின் முதன்மை யுறுமிந்து தேயத்
திலக மெனவொளிர்வான் சென்னை—நலமாக
வுண்முகக் கண்ணு ருறுமா புரசைசேர்
சண்முக ஞானபுரத் தான்.

வடமொழியில் வாத்ரா யன்சொல் பொருளைத்
திடமாய்த் தமிழாற் றெரித்தான்—குடமுனியென்
சச்சிதா நந்தகுரு சன்மரபில் வந்துதித்தான்
அச்செலா மொன்றென்பா னய்ந்து.

எப்புவியு மேற்ப விசைப்பான்பா வேசாமி
குப்புசா மிப்பெயரான் கோதிலவன்—றப்பில்லாக்
கற்பு நிலைவிளக்கக் கன்னியர்க்குச் சொல்லினனல்
கற்பு விளக்கமே காண்.

சென்னை-ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்,
வேதாந்த தர்க்க போதகாசிரியருமாகிய
மகாவித்வான்-ஸ்ரீமத்-கோ. வடிவேலுசெட்டியாரவர்கள்மாணவர்

ஸ்ரீமத்-சி. அங்கமுத்துச்சுவாமியவர்களியற்றிய

வெண்பா.

சாமிகுப்பு சாமியென்பான் சான்றோர் குலத்துதித்தான்
சாமியருள் பெற்றுலக சாட்சியான்—சாமி
கணவனே யென்றுணரக் கற்புவிளக் கத்தை
மணமுறவே சொற்றான் மகிழ்ந்து.

சென்னைச் சிவனடியார் தலயாத்திரைச் சங்கத்தினருளொருவரும்
நேட்டிவ் டாக்டருமாகிய

ஸ்ரீமத்-மோசூர். சண்முகமுதலியாரவர்களியற்றிய

அறுசீர் விருத்தம்.

கற்புடை மாதர் தங்கள் கணவனு ரிடத்து நாளும்
பொற்புற நடக்குஞ் செய்கை புகன்றிடு நூல்கள் யாவும்
அற்புற வாய்ந்த வற்றி னரும்பொரு ளனைத்துஞ்சேர்த்தே
கற்புநல் விளக்க மென்னக் கழறினன் ஞால மெல்லாம்.

போற்றுநற் புகழ்ச்சி யாளன் புனிதமாஞ் சிந்தை யோடே
சாற்றுமில் லறத்தி ருந்தே சனகமா முனியைப் போன்றிங்
கேற்பவர்க் கன்ன தான மெழில்பெற நடத்து மேலோன்
ஆற்றல்சேர் சாமி குப்பு சாமியா மறிஞன் றனே.

ஷெ முதலியாரவர்கள் மாணவர்

ஸ்ரீமத்-ஆ. குமரகுருபிள்ளையவர்களியற்றிய

வெண்பா.

துன்னுபுக ழேந்து சுவாமிகுப்பு சாமிவள்ளல்
பன்னுபுக ழேந்தியெனப் பாவையர்க—டுன்னுமருங்
கற்பு விளக்கமதைக் காட்டினான் வெண்பாவா
னற்புவியோர் போற்ற நயந்து.

சென்னை, வண்ணையம்பதி, செந்தமிழ்க்கவி.

ஸ்ரீமத்-வி. ஷண்முகவேலு முதலியாரவர்களியற்றிய

வெண்பா.

கற்பு விளக்கமதைக் கண்ணகன்ற பார்மீது
நற்புலமை கொண்டு நயமுறவே—யற்புதமாய்ச்
சொற்றான் விரிவாய்ச் சுவாமிகுப்பு சாமியருள்
பெற்றான் பெரியோர்முன் பேர்.

புராணிகர்-ஸ்ரீமத்-கா. இராஜாராம்பிள்ளையவர்களியற்றிய

வெண்பா.

அற்புவிளக் கல்லா வரிவை யியல்காட்டுங்
கற்புவிளக் கத்தையின்று கண்டனனாற்—கற்புவிளக்
கம்பெற்ற சாமிகுப்பு சாமியெனுங் கண்யனியாஞ்
சொம்பெற்ற தென்னமகிழ்ந் தோம்.

பிரசங்கசூளாமணி

க. வ. திருவேங்கடநாயடவர்கள் மாணவர்

திருத்தணிகை. ஸ்ரீமத் - சண்முகமுதலியாரவர்களியற்றிய

கலி நிலைத்துறை.

போற்புறு செஞ்சடை புண்ணியன் றன்னடி புணர்நெஞ்சான்
உற்றநல் லன்பும் பொறையுந் தகவு முயருள்ளான்
அற்புரு மாதர்தம் கற்பு விளக்க மளித்திட்டான்
நற்குண சாமி குப்புச் சாமி நாவல்லோன்.

பண்டிதரத்னம் - குகஸ்ரீ - புழலை. திருநாவுக்கரசுமுதலியாரவர்கள் மாணவர்

தண்டல்கழணி - கிராமமுன்சீபு, புழலை

ஸ்ரீமத்-மாணிக்கவேலுமுதலியாரவர்களியற்றிய

வெண்பா.

வெண்பாப் புலிகளெலாம் வேட்கையுட னேவியக்க
வெண்பாவாற் கற்பு விளக்கநூல்—பண்பாகச்

சற்குணசிந் தாமணியாஞ் சாமிகுப்புச் சாமிசொற்றன்
சொற்குறைவி லாமகிழ்விற் றேய்ந்து.

சென்னை-முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் புத்தகசாலை அதிபர்

ஸ்ரீமத் - சி. ஆறுமுகச்செட்டியார் அவர்களியற்றிய

அறுசீர் விருத்தம்.

கற்பினிற் சிறந்த மாதர் கவினெலா மமைய நூலிற்
பொற்பினிற் பொலியக் கற்பு விளக்கினைப் புரிந்து சொற்றன்
அற்பினி லன்ன தான மாற்றிடு மறிஞன் செய்ய
நற்றமிழ்ச் சாமி குப்புச் சாமியா நாவல் லோனே.

ஸ்ரீமத்-புராணிகர்-கு. குமாரசாமிமுதலியாரவர்களியற்றிய

வெண்பா.

சாமியென வாழ்த்திமகிழ் தாவுசச்சி தானந்த
சாமியடி மைக்கடிமை சாமிகுப்பு—சாமிமால்
கற்புவிளக் கஞ்சொற்றன் கன்னிகைகட் கானகுணப்
பொற்புமுதல் யாவும் புகழ்ந்து.

செம்பியம்-உபாத்தியாயர்

ஸ்ரீமத்-தி. மு. இராஜவேலுமுதலியாரவர்களியற்றிய

வெண்பா.

சங்கையறக் கற்றவர்முன் சாமிகுப்புச் சாமிமகிழ்
நங்கையருக் கானகுண நன்குணர்ந்திங்—கங்கைதவழ்
நெல்லிக் கனியெனவே நேர்கற் புவிளக்கஞ்
சொல்லிமுடித் தான்வியக்கச் சூழ்ந்து.

ஸ்ரீமத்-சி. தங்கவேலுமுதலியாரவர்களியற்றிய

வெண்பா.

கற்பனைமி குத்ததொரு கற்புவிளக் கஞ்சொற்றன்
சொற்பொருண யந்தொனிக்கத் தொல்லுலகில்—விற்பனர்சூழ்
தேனைவரு சாமிகுப்பு சாமியெனுஞ் செம்மலுயர்
சோனைமழை யாகமகிழ்ந் து.

சென்னை-சிந்தாதிரிப்பேட்டை-சண்முகபக்தஜனசபை காரியதரிசி

ஸ்ரீமத்-நி. பாலசுந்தரசெட்டியாரவர்களியற்றிய

அறுசீர் விருத்தம்.

எற்புவிளக் கந்தசைபி னியல்புணர்ந்து நூலதனி னேற்ற மோர்ந்தே
வெற்புவிளக் கெனசாமி குப்புசா மிப்புலவன் வென்ற சீர்சால்
பொற்புவிளக் கம்மெனவே மாந்தரா ரிவ்வுலகிற் போற்றி வாழக்
கற்புவிளக் கம்மெனநூல் சமுறிஞ னதன்பெருமை சமுறற் பாற்றே.

ஸ்ரீமத்-காருடை. ப. சு. நெல்லையப்பிள்ளையவர்களியற்றிய
வேண்பா.

நக்கோர் புகழ்கின்ற சாமிகுப்பு சாமிவேள்
மிக்கார்வத் தோடிளையார் மேம்படவே—பக்குவமாய்
நற்புலவர் கண்டு நயந்திடவே யிந்நாளிற்
கற்புவிளக் கஞ்செய்தான் காண்.

கொத்தவால்சாவடி - பாக்குவியாபாரம்
ஸ்ரீமத்-சி. கலியாணசுந்தரசெட்டியாரவர்களியற்றிய
அறுசீர் விருத்தம்.

நித்தியவாழ் வெனுமமுத நிறைகலையார் கலிபடிந்து சிவந்த காரின்
உத்தமனுஞ்சாமிகுப்பு சாமி யென்பானருந்தமிழி னேங்கனின்றே[ங்கச்
இத்தரையின் மிசையிலங்கு மேழையராம் பைங்கூழ்களெழில்பெற ரோ
சுத்தமுறு கற்புவிளக் கம்மெனுநூல் மாரிதனைச் சொரிந்தான் மாதோ.

ஸ்ரீமத்-புதுவை. இராஜலிங்கமுதலியாரவர்களியற்றிய
கலி விருத்தம்.

கற்பினி னிற்குறுங் காலநன் மாரியன்
அற்புத மோர்ந்துவிண் ணூர்ந்திடு மாதரும்
எற்புற வேன்றணி கற்புவி ளக்கநூல்
கொற்பெற வாற்றினன் குப்பு சாமியே.

ஸ்ரீமத்-ரேபல்லே. வேணுகோபாலநாயுடவர்களியற்றிய
நேரிசை வேண்பா.

சாமிகுப்பு சாமியெனுஞ் சற்குணனின் னுவனுடன்
ஆமிதென வாய்ந்தே யறைந்தனனால்—பூமிதனில்
சொற்பெருபா வாணர் சுவையிதென நன்குமதி
கற்புவிளக் கத்தினையே காண்.

சேலம், ஸ்ரீ திருவள்ளுவநாயனார் சங்கத்தலைவரும்
ஆயுள்வேதியருமாகிய
நெ. மு. ஷ. சண்முகசுந்தர நாயனா ரவர்களியற்றிய
அறுசீர் விருத்தம்.

கற்பினை கடந்த கற்பைக் கையுறுங் கனியே யென்னப்
பொற்புற விளக்கக் கற்பு விளக்கமென் றோர் நூல் பொய்யா
ரற்புதக் காட்சிக் காக்கி வறந்தனை வளர்த்தான் சாமி
குப்புசா மிக்கோ னென்னுங் கோதில்சீர் குணத்தி னானே.

அநுபவாநந்தம்
ஸ்ரீமத்-தி. வெங்கிடராமிலுநாயுடுகாரவர்களியற்றிய
அறுசீர் விருத்தம்.

வேதமுட னாகமபு ராணமிதி காசமதின் மெல்லி யர்க்கு [கப்
நீதமுட னறைகற்பி னொழுக்கமெலாந் தொகுத்திட்டு நேர்மையா
போதமுடன்கற்புவிளக் கம்மெனுநூலொன்றியற்றிப்புதுமையாக
சாதமிடுஞ்சாமிகுப்புசாமியெனும் ஞானவள்ளற்றந்தான்மாதோ.

இந்நூலாசிரியரின் சகோதரர்

ஸ்ரீமத்-தே. அ. முருகேசகிராமணியாரவர்களியற்றிய

ஆசிரியப்பா.

தேசமெ லாம்புகழ் திருத்தணி கைமலை
வாசம் புரிமுரு கேச னருளால்
சிறப்பார் சூளைத் திருநக ரதனில்
வறப்பிலாச் செல்வம் வாய்ந்து வாழ்வோன்
போத விளக்க முதற்பல போத
சாதன முணரச் சாற்றிய நிமலன்
தன்னுயிர் போல மன்னுயிர் நோக்கு
நன்னய முடையவ னென்னுயிர்த் தமையன்
தப்பி லாத சாமியாஞ் சாமி
குப்பு சாமியென் குன்றாச் சீரான்
முதலிடை கடையெனு மூவகை மாதரின்
விதமறி வகையா விளம்பினன் கற்பு
விளக்க மதனின் மேன்மையை வகையா
உளக்க ணுடையார்க் குரைத்தலு மாகா
பத்தினிப் பெண்களின் பான்மை யனைத்து
முத்தம மாக வுரைத்திட் டனனே.

இந்நூலாசிரியரின் பிரதமமாணவர்வன்னியத்தேனாம்பேட்டை

ஸ்ரீமத்-வ. பொன்னம்பலநாயகரவர்களியற்றிய

வெண்பா.

திருவளருங் கற்புத் திகழ்விளக்க மொன்று
தருமகுணச் சாமிகுப்பு சாமி—கருணையுள
அய்யாக்கண் ணுரியனு ராரருளாற் சொற்றனனல்
செய்யாண் மகன்போற் றெளிந்து.

புராணிகர்-சரசவாணி,

ஸ்ரீமத்-கா. இ. சிதம்பரசாமிபாண்டியரவர்களியற்றிய

அறுசீர் விருத்தம்.

போற்புவிளக்கிடஞானசாத்திரங்க ளனைத்தினையும்பொருந்தவோர்
அற்புவிளக்கிடவெவர்க்குமெஞ்ஞான்றுமிளையாமலசனநல்கி[ந்தே
வெற்புவிளக் கெனமிளிருஞ் சாமிகுப்பு சாமிகுருமேன்மைசான்ற
கற்புவிளக் கம்மெனுநூல்பெண்மணிக ளுய்ந்திடவேகழறினனால்.

செந்தமிழ் இரத்தினகரம் ஸ்ரீமத்-வல்லை. சண்முகசுந்தரமுதலியார்
அவர்கள் மாணவி-பண்டிதை

ஸ்ரீமதி-S. கிருஷ்ணவேணி யம்மையாரியற்றிய

வெண்பா.

சாமிகுப்பு சாமியெனுந் தாளாளன் சார்ந்தவரைப்
போமினெனப்புகலாப் புண்ணியன்—தோமிலருங்

கற்பு விளக்கநூற் கண்டான் மனுமுறையு
னிற்பதற்குப் பின்வாங்க நேர்.

ஷை முதலியாரவர்கள்மாணவியும் ஷை அம்மையார்
சகோதரியுமாகிய,

ஸ்ரீமதி-த. பதுமாவதியம்மையாரியற்றிய

வெண்பா.

கற்பு விளக்கமெனுங் காணரிய நீதிநூ
லற்புதமாச் சொற்ரு னணிபெறவே---சிற்பரனுக்
காமவர்கட் கன்ன மரும்புலவர்க் கின்சொலளி
சாமிகுப்பு சாமிதவத் தான்.

சிவஸ்ரீ-யதீந்திர சுவாமியவர்கள் மாணவியும்
ஸ்ரீமத்-தி. வையாபுரிமுதலியாரவர்கள் மனைவியுமாகிய

ஸ்ரீமதி - தி. அகிலாண்டநாயகியம்மையாரியற்றிய

அறுசீர் விருத்தம்.

செல்வியென வாழ்ந்தாலுஞ் சிறப்பனைத்துமுற்ருலுஞ் சீர்த்திவா ய்ந்த, கல்விவளமுணர்ந்தாலுங் கற்பொன்றே சிறக்குமெனுங் கருத்துக் கேற்ப, பல்வினய முறுகற்பு விளக்கமென வொருநூலைப் பகர்ந்திட் டானல், நல்விவேகியாம்ஞானி சாமிகுப்பு சாமிநன் ருவலோனே.

ஷை சுவாமியவர்கள் மாணவியும்
ஸ்ரீமத் - வா. தி. கோவிந்தராஜ முதலியாரவர்கள் மனைவியுமாகிய

ஸ்ரீமதி - வா. கோ. ஜெயலட்சுமியம்மையாரியற்றிய

அறுசீர் விருத்தம்.

மாதர்களுக் குயரியவோ ரணிகலமா யுளகற்பின் மாட்சி யோர்ந்திங், காதரவி னுடுவிளங்கு மொழுக்கமனைத் தையுந்திரட்டி யரிவை யோர்க்குச், சாதகமாச் சொற்றிட்டா னற்கற்பு விளக்கமெனுந் தக்க நூலைப், போதமிகு சிவயோகி சாமிகுப்பு சாமியெனும் புலவ ரேறே.

ஷை சுவாமியவர்கள் மாணவியும்
ஸ்ரீமத் - மு. அப்பாதுரைமுதலியாரவர்கள் மனைவியுமாகிய

ஸ்ரீமதி - அ. நாராயணியம்மையாரியற்றிய

அறுசீர் விருத்தம்.

துளக்கமிகுங்கற்பொன்றே சீலமெனத் துணியாதார்தூய்மையாவு மிளக்கமுறு மெனுமுண்மை யினைமாத ராரறிதற்கேற்றகற்பு[ல்லா விளக்கமெனவொருநூலையியற்றிட்டானிறைவனருள்விளையாட்டெ முளக்கண்ணி லேதேறுஞ் சாமிகுப்பு சாமியாமுண்மை யோனே.

சாத்துகவிகள் முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

சென்னை-ஹிந்துதியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்

"லோகோபகாரி" "சக்ரவர்த்தினி" ஆகிய

இவ்விரு பத்திரிகாசிரியரும், அதிபரும்

வேதாந்த தர்க்க போதகாசிரியருமாகிய

மகாவித்வான்,

ஸ்ரீமத் - கோ. வடிவேலு செட்டியாரவர்களியற்றிய

நிலமண்டில வாசிரியப்பா.

பகவன் பரமன் பார்வதி கேள்வன்
நகவன் மழுவுடை நம்பன் பசுபதி
முன்னாட் பகர்ந்த முதுமறைப் பொருளைப்
பின்னு மாந்தர் பிறங்க விரித்த
சங்கர சற்குரு தாள்பணி சீமான்
பொங்கர வணிந்த புனிதனைப் போற்றுவான்
திருத்துருத் தியினிற் றிருக்கோ யில்கொள்
விருத்தன் ஞான விமலன் கரபாத்
திரன்மர புதித்துச் செவ்வே விளங்கித்
திரஞா னத்தைத் தெளிவா வெவர்க்கும்
பவமறச் சிவமுறப் பண்பாப் போதித்
தவமறச் செய்யு மற்புத னீச்சூர்ச்
சச்சிதா நந்த சாமியின் சரண
நச்செனும் பிறப்பற நாளுந் துதிப்பான்
அவனடி மறவா வையாக் கண்ணனுந்
தவனடி போற்றித் தத்துவ முணர்ந்தோன்
ஈகை யின்சொ லிரக்கந் தவந்துதி
ஓகை முதலன வுற்றவ னியல்பா

வேதாந் தத்தின் விழுப்பொரு டன்னை
சூதா நெறியொழி தூயவர் பாலுணர்ந்
தையந் திரிபற் றுநந்த மானவன்
வையம் பொய்யென வாய்ப்பா வறிந்தவன்
செய்கடன் றன்னைச் செய்யவர் வியக்கச்
செய்பவன் பன்னூல் செய்த வுத்தமன்
தப்பறு நெறியைச் சார்ந்தவன் சாமி
குப்பு சாமியென் கோமான் கற்பினை
விளக்கக் கற்பு விளக்கமென் றொருநூல்
துளக்கறு புலவர் சொற்றிடு வழிபல
கண்டுவெண் பாவில் கண்டெனச் சொற்றனன்
மண்டினி யுலகோர் வாழ்வதற் கேதுவா
அந்நூ லரும்பொரு ளளப்பரு மாட்சிதாந்
தந்நலம் பெறற்குச் சாமி போல்வதாம்
பன்னூல் முறைபல பாங்கா விருப்பதா
நன்னூ னயங்க ணயப்ப விருப்பதாந்
தேவர் போற்றுஞ் சிறப்பா ரிந்நூல்
எவரும் போற்றற் கினிதா யினதே.



ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணேநம:

கற்புவிளக்கம்.

பாயிரம்.

நேரிசை வெண்பா.

விநாயகர் துதி.

முன்னூற்பின் னூற்கு முரணும லெல்லாமா
நன்னூலுஞ் சம்மதிக்க நானிந்நூன்—முன்னவனு
மானை முகத்தானை யாரறிவா யாய்ந்தளித்தே
னேனை துதியே னிதற்கு. (க)

பொருள் வணக்கம்.

எல்லாமா யல்லவுமா வெங்குநிறை யாரறிவை
நல்லவ ராலறிந்து நன்கேத்தி—நல்லவன்போற்
கற்புவிளக் கப்பெயர்நூற் கண்டு மொழிந்தனனு
லற்ப வறிவினு லாய்ந்து. (உ)

சுப்பிரமணியர் துதி.

ஆறுமுக வெங்கோ னகிலமோ டாரறிவாய்
வேறுபா டின்றி விளங்குவதா—லாறுமுக
வெம்மான் றிருவுருவ மென்னுருவ மாகவுணர்ந்
தம்மாவின் நூலளித்தே னூர்ந்து. (ங)

சிவனருளை வியத்தல்.

ஆக்கியளித் தாளு மரனருள வின்நூலை
யாக்கினேன் யாரு மகமகிழ—வாக்கிலவன்
றங்கி யறைந்ததனுற் சாற்றும் வணக்கங்க
ளிங்கென் னுரைப்பே னிசைந்து. (ச)

RU1
N17

நூற்செய்த காரணம்.

ஈச னெனக்களித்த வேதமிலா நல்லறிவாற்
காசகன்ற கற்புவிளக் கம்மெனுநூல்—வாசவா
மற்பி னியற்றினனெ ஞ்சார்ந்த மங்கையர்த
மற்பகுண மெல்லாமிங் காய்ந்து. (௫)

கற்புடையார் நற்குணம்போற் காட்டி யபிநயிக்குங்
கற்பில்லா மங்கைமார் கட்குணர்த்தப்—பொற்பாகக்
கற்பினர்க ணற்குணமுங் கற்பில்லார் தங்குணமுங்
கற்பித்தே னிந்நூலிற் காண். (௬)

ஆடவர்கடமை.

கற்றுணரா வென்போல்வார் கற்றுத்தம் மில்லவர்க்குப்
பற்றகல விந்நூலைப் பண்பாக—வுற்றுணர்த்திப்
போற்று மருந்ததியே போற்புனித மாயிலகத்
தேற்றுவா ராக தெளிந்து. (௭)

குருபரனருளாற் கூறினேனென்னல்.

கார்மனத்து மங்கையருங் காசினியிற் கற்பதனாற்
பேர்பெற்றெக் காலும் பிறங்கிடவே—பார்புகழு
மென்குருவின் றன்னருளா லிங்கிசைத்தே னிந்நூலை
நன்கறிவாய் நின்று நயந்து. (௮)

நூலதிகாரி.

ஏகசிவ னென்னறிவி லிங்கிதமா வீற்றிருந்து
சோக மிலதாகச் சொற்றவிந்நூ—லேகமனப்
பத்தினிகட் கன்றுண்மைப் பத்தினிக ளாவதற்கு
நித்தமுயல் வார்க்கா நிலத்து. (௯)

அவையடக்கம்.

மாதர்குணஞ் சொல்ல மதிபோதா தானு
நாத னருளேவ நானுரைத்தே—னேதமெனக்
கல்லா ருரைப்பார்கள் கற்புவிளக் கத்தினை
நல்லா ருரைப்பார் நயந்து. (௧௦)

நூல்.

மூவர்களுந் தேவர் முனிவர்களு மென்னுவ
ரேவமறப் பத்தாவை யேத்துவர்முன்—மூவர்களுங்
கண்டஞ்சத் தம்பர்த்தா கால்பணிந்து பூசிப்பார்
பெண்டகைமை தப்பாத பேர். (௧)

வாடு மலரணிந்தால் வையு முலகென்று
வாடுதலில் கற்பிணையே மாமலராப்—பீடுறவே
கொண்டணிநற் பூவையர்கள் கூறுவட மீனெனவே
யண்டர்களும் போற்றவாழ் வார். (௨)

பத்தாவின் பாதம் பணிகின்ற பத்தினியை
நத்த னயன்றுதிப்பர் நாரியென—வுத்தமியைத்
தேவரெலாம் போற்றியே சேவிப்பா ரென்றதனாற்
றேவரினு மேலாகச் செப்பு. (௩)

பத்தாவின் பின்னுண்டு பாயிற் றுயின்றதன்பின்
கத்தனென வுட்கொண்டு கண்டுயின்று—பத்தா
வெழுவதற்கு முன்னே யெழுகின்ற மாதே
பழுதகன்ற பத்தினியாம் பார். (௪)

காலை யெழுந்திருந்து காலைக் கடன்முடித்து
வாலையாங் குங்குமத்தை வாய்ப்பவிட்டுச்—சோலைபுக்கு
நல்ல மலரெடுத்து நாயகன்று ளர்ச்சிப்பாள்
செல்வப் பதிவிரதை தேர். (௫)

தாய்தந்தை சுற்றமெலாந் தானறவே விட்டிடினுந்
தாய்க்கதிக மாங்கணவன் றன்னைவிடாள்—வாய்மையுளா
ளாலிகுணத் தாள்பூ ணனைத்து மிழந்தாலுந்
தாலிதனைக் காப்பாளே தான். (௬)

ஆளனிலாக் காலத் தலங்கரியார் தம்முடம்பை
யாளனே தெய்வமென வாய்ந்தவர்க—ளாளனிடம்
பத்தியுற்ற மாவிரதி பட்சணமுஞ் செய்வதில்லை
பத்தியிலாப் பாமரமே பார். (௭)

ஆடையணி வேண்டி யருங்கற்பைப் போக்கலிலா
ராடை யணிக்கா வழுங்கலில்லை—வாடைமலர்
நற்றிருவை யொத்திருப்பர் நாடுங்கான் மங்கையர்க்குக்
கற்பி னழகே யழகு. (௮)

ஆபரண வாடை யணிந்தாலுங் கற்புடையார்
பாபகுண மாதரைப்போற் பற்காட்டா—ராபரணந்
தாங்கிடினுந் தாங்கார்போற் சாந்தகுண மாயொழுகித்
தீங்கின்றி வாழ்வார் தெரிந்து. (கசு)

ஆளனிலாக் காலத் தலங்கரித் துண்மகிழா
ராளனிட மன்பா ரரிவையர்க—ளாளன்றன்
காண வணிந்து களிப்பூட்டி யெந்நாளு
மாணமைய வாழ்வார் மகிழ்ந்து. (க0)

கொண்ட கணவன் குரூபியே யானாலும்
பண்டைப் பயனெனவே பார்த்தறிந்து—தெண்டனிட்டுத்
தொண்டைத் தினஞ்செய்து தூயமனத் தோடிருப்பர்
கண்டுமொழி கற்புடையார் காண். (கக)

குருவைச் சிவமாகக் கொள்சீடன் போலக்
குருவடிவா நாயகனைக் கோதை—பெருக
நினைத்துத் துதித்துவரி னீள்சுவர்க்கந் தன்னுள்
வினையொழித்துச் சேர்வார் விரைந்து. (கஉ)

திரிமூர்த் திகளுக்குந் தேரரிய மாதர்
பரியகுண மெந்நான் பகர்வேன்—திரிகுணமு
மற்றகுரு மூர்த்தியடிக் காளான வன்புடையார்
பற்றகலக் காண்பார் பரிந்து. (கங)

இருவருள மும்மொத்தே யிட்டுண்டு வாழின்
பெருகுந் திருவனைத்தும் பெற்றுக்—கருவற்று
நன்னரி கக்கு நறுங்கொன்றை யான்குன்றுள்
பன்னாளும் வாழ்வார் பரிந்து. (கச)

மனையாள் மனைவியென மன்னுமபி தானந்
தனையாய்ந் ததற்கிசையச் சால—மனையறத்தைச்
சற்று மிகவாமற் றனடத்துங் கற்பினரே
குற்றமிலா மாதரெனக் கூறு. (கரு)

உண்மையா நாயகனே யொப்பற்ற தெய்வமெனத்
திண்மையாக் கொள்ளுந் திருவனையா—ளுண்மையா
நாடுவளோ நல்விரத நாடிடினு நாயகற்குப்
பீடுறவே நோற்பளெனப் பேசு. (கசு)

ஒருகோடி நோன்பை யுஞற்றிடினுந் தீயா
ளருங்கற் புடையாள்போ லாகாள்—நிருமலமா
நாயகனை யேத்துகின்ற நல்லார் பிறதெய்வ
நேயமுடன் போற்றார் நிலத்து. (கஎ)

தெய்வமென நாயகரைச் சேவிக்குங் கற்பினர்கொண்
டுய்யும் விரதமுமிங் குண்டோதான்—துய்யமன
மாதறிவா ளிவ்வுளவை மந்தகுணத் தாளறியாள்
பூதலத்திற் கன்னவளோ பொற்பு. (கஅ)

விகற்பகுண மாதருக்கு வேதந்தா னோன்பை
விகற்பகுண நீக்க விதமா—விகற்பமின்றிச்
செப்பியதைக் கற்பினர்பாற் றேர்ந்தறிந் தொண்டொடியே
தப்பின்றி வாழ்தலே சால்பு. (கக)

நாள்கிழமை நோன்பெல்லா நாயகனே யென்பவடான்
நாள்கிழமை நோன்புகளை நாடுவளோ—நாள்கிழமை
யற்றவர்க்கு மாளனையே யன்பாத் துதிக்குநெஞ்ச
முற்றவர்க்கு மில்லையென வோது. (உ0)

முத்தி யளிக்கு முதல்வனென நாயகனைச்
சுத்த மனத்தாற் றுதிப்பவண்முன்—சுத்த
வடிவாகி யேமன் வருவிருந்துக் கொப்பா
வடிபணிந் தேற்றழைப்பா னைந்து. (உக)

நாயகனே தாய்தந்தை நாயகனே பொன்னுடைபூண்
நாயகனே கற்பினர்க்கு நற்றெய்வம்—நாயகனை
முக்கண்ண னென்று முதுமனத்தாற் றேத்தரிப்பார்
துக்கமற்று வாழ்வார் சுகித்து. (உஉ)

தேசம் புகழ்ந்தேத்துஞ் செய்யதிரி மூர்த்திகளை
நாசமிலோர் மாதுகற்பால் நாணவவர்—மாசகன்ற
பால வடிவாக்கிப் பத்தாமுன் காண்பித்தா
ளாலமன நீலி யறி. (உங)

நாரி சரச்சுவதி நாரணியு மத்திரியின்
பாரி யநசூயை பாற்சென்று—சூரிதமா
வேண்டித்தந் நாயகரை மீட்டுப் பதிபத்தி
யீண்டவறிந் தேகினா ரெண். (உச)

மொழிமறுத்துப் பேசார் முகமலர்ச்சி நீங்கார்
பழியினல்லார் பத்தாமுன் பண்பாய்க்—கழியன்பா
ஞுடிதம யந்தி நளனேநற் றெய்வமென்று
வேடன் றனையெரித்தாண் மேல். (உரு)

பத்தாவை யீசனெனப் பண்டுபணி வாசுகியாள்
சற்றேனு நீங்காது தானிருக்க—வற்றமுள
கொங்கணவன் பிச்சைக்காக் கோபித் தறிவழிந்தான்
தங்கணவன் பத்தியன்றே சாற்று. (உசு)

பாரி குணவதியாய்ப் பாரிலுயிற் பத்தாவுந்
தேரிச் சிவையெனவே சிந்திப்பான்—நேரிதற்குக்
காரைக்கா லம்மைதனைக் கண்டு பரமதத்தன்
சீரையுறச் சிந்தித்தான் றேர். (உஎ)

கற்புக் கரசாகுங் காரைக்கா லம்மையவர்
கற்புக் குணத்தாற் கணவனே—சிற்கனமாந்
தெய்வமெனச் சிந்தித்த சிந்தனையாற் றெய்வத்துட்
டெய்வமென நின்றார்நீ தேர். (உஅ)

புருடபத்தி யில்லாதார் பொற்பாச்சோ றிட்டாலுந்
தருமநெறி யோருண்ணார் சார்ந்து—புருடபத்தி
யுள்ளார்கூ ழிட்டாலு முண்பவர்தம் பாசபந்தந்
துள்ளி நடந்திடுமே சோர்ந்து. (உகூ)

கொண்டானைக் கொல்லுங் குணம்படைத்த பெண்கடாந்
தெண்டனிட வேறுண்டு தெய்வமென்பார்—பண்டைமறை
சொற்றபடி நாயகனைத் தூயசிவ மாய்ப்பணிவோ
ரற்புதங்கள் செய்வாரிங் கார்ந்து. (௩0)

அத்த னயன்மா லருந்திய சேடம்போ
லுத்தமிக ணாயகனு ருண்டவெச்சில்—புத்தமுதம்
போலருசிக்கினைந் துண்டு புகழ்வார்க ணீலிகடா
மால மெனவெறுப்பா ராங்கு. (௩க)

வெற்றிலையுந் தின்றிடார் வேற்றிடமுஞ் சென்றிடா
ருற்ற கணவனிலா வுத்தமிகள்—குற்றமுளாள்
நாய்போற் றெருத்தெருவாய் நாணமின்றி யேசுற்றிப்
பேய்போ லலைத்தழிவாள் பின்பு. (௩உ)

ஆபரண மாக்கற் படுத்துள்ள நங்கைமா
ராபரணம் வேண்டி யலேவதிலே—யாபரணம்
பூண்டு தடிக்கழுதை போற்றிரிந்தே கற்பில்லார்
நீண்டபழி யேற்பார் நிலத்து. (௩௩)

வீட்டிற்கழகு விகற்பமிலா மங்கையரோ
காட்டுமிரு கம்போன்ற கன்னியரோ—நாட்டுங்கள்
வேட்டைநாய் போற்குலேக்கு மெல்லியரை விட்டொழித்துக்
காட்டை யடைதல் கனம். (௩௪)

நல்லவினேக் கீடாக நன்கமைவா ணன்மனேவி
பொல்லா வினேதனக்கோ பொல்லாளாம்—நல்லாய்
வினேவடிவே பெண்ணென்ற வெண்காடர் வாக்குத்
தனேயறிவாய் சந்ததமுந் தான். (௩௫)

நாயகனு நாயகியு நண்ணிமன மொன்றுகி
நேயமுற்று வாழ்மனேயே நீள்கைலே—தூயமன
மில்லாதார் தங்குமில மெவ்வெழிலோ டிற்றாலும்
பொல்லா நிரயம் புகல். (௩௬)

பதிவிரதை நாளும் பசியென்பார்க் கன்னந்
ததிநெய்பா லோடுந் தருவாள்—சதிகாரப்
பாவி பசித்தோரைப் பார்த்திடாள் பார்த்தாலோ
தீவியெனப் பாய்வாள் செறுத்து. (௩௭)

அன்ன மறுசுவையா வட்ட கறிகளுடன்
றன்னகத்தி லேமலிந்து தானிருக்க—வன்னமிலா
தேங்கிப் பசியென்றோர்க் கீயாதா ளேற்றுண்டு
தேங்கித் திரிவளெனச் செப்பு. (௩௮)

பிச்சையிட் டுண்ணுதார் பேய்போற் றெருத்தெருவா
யிச்சையுறு தேங்கிமிக வேழ்மையடைந்—தச்சமுற
வாடித் திரிகின்றார் வாயாடு மங்கைநீ
தேடிவந்தார்க் கன்னமிடத் தேர். (௩௯)

அன்னமிலா தேங்கி யழுகின்ற வேழைகண்மு
னன்னமிடா வற்பரென வாய்ந்துணர்ந்—தன்னமதை
யஞ்சாம லற்றவர்கட் கன்புடனே யிட்டணங்கே
பஞ்சைகளேக் காப்பாய் பரிந்து. (௪0)

அன்ன மிடலொன்றே யருந்துணையா மாருயிருக்
கன்னமிட வுன்னாத வன்னையரே—யன்னமிட்டா
னல்லோர் மதிப்பார்க ணான்மறையுஞ் சம்மதிக்கும்
வல்லநமன் வாதைசெயான் வந்து. (௪௧)

வேடனொரு வேதியற்கு வேண்டிச்சின் மாவளித்துக்
காடசன்று நாடாண்டான் கற்பினரே—தோடமற
வன்னமிட் டேழைகளை யாதரிப்பீ ரெக்காலு
மென்னகுறை யுற்றாலு மிங்கு. (௪௨)

அன்னமிடு வாரை யரனருளா லாதரித்துப்
பன்னெடுஞ் செல்வங்கள் பாலித்துப்—பின்னமறச்
செல்வத் திருவடிக்கீழ்ச் சேர்த்தருள்வா னுண்மையிது
நல்லதிருக் கற்புடையாய் நாடு. (௪௩)

வேத முரைத்தவறம் வேண்டியதுண் டாங்கனைத்து
மேதமறச் செய்வதனுக் கேலுமோ—மாதரீ
ரன்னதா னம்மொன்றை யாற்றி னறமனைத்து
நன்னயமாய்ச் செய்ததொக்கு நம்பு. (௪௪)

பிச்சையிடா வில்லம் பெருங்காடென் றெண்ணாமல்
பிச்சையென்றால் லச்சையெனும் பேதையே—பிச்சையிடு
நற்கிரியை தன்னை நடத்திடவே பெண்கடமை
யுற்பவஞ்செய் தானீச னோர். (௪௫)

அற்றவர்கட் கன்னமிடு மாரணங்கை யவ்வழியர்
குற்றமிலா வன்னையெனக் கும்பிடுவார்—நற்றவந்தா
னீதொழிய நுங்கட் கியம்பவில்லை யெவ்வறமுந்
தீதொழிப்பீர் செய்வீரிதைத் தேர்ந்து. (௪௬)

பெண்ணாய்ப் பிறந்ததனாற் பெண்ணாகாய் பெண்மணியே
பெண்மைப்பண் புற்றானீ பெண்ணாவாய்—பெண்குணந்தா
னன்னமிட் டேழைகளை யாதரித்து நாயகனை
நன்னயமாய்ப் போற்றுவதா நாடு. (௪௭)

சாத்திரங்கள் பல்விரதஞ் சாற்றிடினு மேற்போர்க்கு
நாத்தியெனா தன்னமதை நல்கியே—பாத்தியமா
வுண்ணும் விரதத்திற் கொப்பாம் விரதங்கள்
மண்ணுலகி லில்லை மதி. (௪௮)

அன்னமிட் டிச்சுவரி யாளன்ன பூரணிப்பேர்
மன்னிடவே பெற்றென்று மாதருக்கே—யன்ன
மளிக்கு முரிமையுண் டாமெனவே தாபித்
தொளிக்குளொளி யாகின்று ளோர். (சகூ)

ஏழைகளுக் கன்னமிட் டேழையே யானாலுங்
கோழைமனங் கொள்ளாத கோதையர்க—ளேழைவந்தா
லன்புமொழி கூறி யணுவளவே னுந்தந்து
நன்மயமாய் வாழ்வார் நயந்து. (ரு௦)

அன்புடையார் போல வபிநயித்து வேற்றோர்பா
லின்புறுவார் கேட்கி லிகழ்ந்திடுவார்—துன்புறத்தீ
மாதர் செயுமாயை மாதேவ ராலுமுணர்ந்
தோதற் கரிதெனலே யோர். (ருக)

ஆயிரமா நெஞ்சி னரிவையரை நம்பற்க
வாயினிலீ ரம்மில்லா வம்பிக—ளாயிவரை
நம்பினவர் நற்கதியை நாடுவரோ யானறியேன்
வெம்பிப் புழுங்குவருள் வெந்து. (ருஉ)

காசி யளவினிலே கண்டிடலாம் பெண்கடமைக்
காசி யரிதானுற் காய்வார்கள்—வேசிகள்போல்
வாயாடு நாய்களுடன் வாழ்வதனுற் புண்ணியம்போந்
தோயாம னீங்கிடவே சூழ். (ருங)

காய்மனத்துப் பாவி கணவனைவிட் டுப்பிரிந்து
தாய்வீடு போய்ப்புக்குத் தாளிட்டு—நாய்போலப்
பாய்ந்து துரத்தவே பந்துக் களைவிடுப்பாள்
தாய்க்குப்பின் றூரமெங்கே சாற்று. (ருச)

பாலை நிலமதனிற் பார்த்தாலு நீரதனை
வேலை நிகர்த்தவிழி மெல்லியர்கண்—மாலைமனந்
தன்னிலே யன்பதனைத் தன்னமுமே காண்பரிது
நன்காய்ந்தே சொற்றே னயந்து. (ருரு)

நாயகரைத் தாமயக்கி நாயகிமார் நாணமின்றி
நாயகர்க்கு நாயகராய் நாய்போலக்—காயக்
குலைத்து நடுத்தெருவிற் கூத்தாடி நின்று
கலைப்பார் குடும்பத்தைக் காண். (ருசு)

வினைவடிவே பெண்ணென்று வேதமுத லோர்ந்தோர்
தினையளவுந் தப்பாது செப்ப—வனைவோரு
மீதுண்மை யாகுமென வேக்கமறத் தேர்வாரேன்
மாதுண்மை தோன்று மனத்து. (டுஎ)

கற்பழிதல் வேற்றாள் கலவியொன்றி னாலென்பர்
கற்புநிலை பற்பலபோற் கற்பழிவும்—பற்பலவா
நாயகனார் சொற்றவறி னன்மைதருங் கற்பதனுக்
கேயமுறு மாதேநீ யெண். (டுஅ)

நாயகனைச் சீறி நடுநிசியிற் றாய்வீடு
காயமென நம்பிப்போங் கற்பில்லார்—நேயமுடன்
சின்னாள் வரையிருந்து சீர்குலைந்து வாழ்விழப்ப
ரென்னாணை யுண்மையா மே. (டுகூ)

தாய்வீடு வந்தவட்குத் தக்கபடி புத்திசொலிக்
காய்மனத்தைப் போக்கிக் கணவனுட—னேய்வுறவே
கூட்டி யனுப்பாக் குணங்கெட்ட தாய்தந்தை
மாட்டென் னுரைப்பேன் மதித்து. (கூ0)

தாய்தமையன் றங்கைதந்தை சாயாமற் காப்பரெனத்
தாய்க்கதிக மாங்கணவற் றள்ளாதீர்—தாய்முதலோ
ரன்ன மிடினு மளிப்பாரோ வாளனின்ப
முன்னுவீர் மாதர்களே யுற்று. (கூக)

எல்லா மளிப்பார்க ளின்புடைய தாய்வீட்டார்
நல்லகண வன்சுகத்தை நல்குவரோ—வல்லார்போல்
வாய்பேசி நாயகன்றான் வாரா வகையடக்கி
னாய்போ லலைவீர் நலிந்து. (கூஉ)

ஆளன்மேற் கோபித் தனைவீடு போய்ப்புகுந்
தாளன் றனைவெறுத்தா லாபத்தா—மாள
னடித்தாலுங் காப்ப னணைத்துக் களிப்பன்
கடித்துரையா துன்கணவற் கா. (கூ௩)

தாய்தந்தை சோதரர்கள் சந்ததமுங் காப்பரென
வோய்வின்றித் தாய்வீட்டிற் கோடினா—லாய்முதலோர்
சின்னாள் கழிந்ததன்பின் சீறுவர்க ணங்கைநீ
பொன்போற் புருடனையே போற்று. (கூ௪)

ஆயா தனைவீ டடுத்தடுத்துச் செல்பவடா
ளேயாத் துயருற் றெழிந்திடுவா—ளாயாது
நல்லதங்கை தாயிற்போய் நாசமுற்றாண் மக்களுடன்
முல்லைநகை மாதேநீ முன். (சுரு)

தாய்மனைக்குப் பெண்க டழைத்துச் செலவேண்டிற்
றாய்தாங் கணவனுடன் சோர்வின்றி—யாய்பணிபூண்
டன்பாகச் சென்று லழகென்பர் நல்லோர்கள்
கன்னெஞ்ச மாதேநீ காண். (சுசு)

நம்பிநம்பி தாய்வீட்டை நாயகனை விட்டுப்போய்
வெம்பி யலைந்தவர்கள் வேண்டியபே—ரம்புவியி
லேட்டி லெழுத விடமில்லை யொண்டொடியே
கோட்டம்விட் டுண்மைதனைக் கொள். (சுஎ)

தாய்வீடு சென்று தனித்திருக்கச் சம்மதியாள்
வாய்மையா நாயகனை வந்திப்பாள்—காய்கின்ற
நாய்போன்ற நங்கையர்க ளுயகனை விட்டுவிட்டுத்
தாய்வீடு போவார் தனித்து. (சுஅ)

பசியென்றோர்க் கன்னமிடாள் பத்தாவை நாளுஞ்
சசிமுடியோ னென்றெண்ணாள் சாலக்—கசிவுடனுண்
டேதமுற நின்றயலோ ரேசவுடற் றுங்கிடலிற்
சாத னலனெனவே சாற்று. (சுகூ)

பசித்து விழித்திருக்கை பத்தினிமார் கொள்கை
பசிக்குமுனே யுண்பாள் பசாரி—விசுத்த
மனமின் மடவாண் மயக்கிப் பிறரைக்
கனமழிவா ளுண்மையிது காண். (எ0)

பேயொடுவாழ்ந் தாலுந்தீப் பெண்ணுடன்வாழ் தல்கூடா
பேயொடுங்கிக்கொம்படியால் பேர்ந்தகலும்-பேயொடுங்கா
வாயாடிப் பெண்பேய்கள் வன்பிரம் பிற்குமஞ்சா
வோயாத் துயர்செய்யு மோர். (எக)

பத்தாவைப் பார்த்தகண்ணாற் பார்ப்பாரோ மற்றவரைச்
சித்தங் கலங்காத் தெரிவையர்கள்—பத்தாவை
நக்க னெனமதியார் நாய்நரிக ளாய்ப்பிறந்து
திக்கற் றலைவார் திகைத்து. (எஉ)

கணவனுண் ணுமுன்னே கர்த்தபம்போ லுண்டு
சுணங்கனைப்போன் முன்னின்று தூற்றிக்—குணங்கெட்டுக்
கண்டபடி யாடுங் கசுமாலப் பெண்பேயைச்
சண்டாவென் செய்வாயோ சாற்று. (எ௩)

நாயகனார் சொன்மறுத்து நாடுதிரி தீயாளை
மாயவெம தூதர் மயிர்பிடித்—தேயமிகுங்
காரறையில் வைத்துக் கடுஞ்செக்கி லிட்டரைப்ப
ரீரமிலா மங்கைநீ யெண். (எச)

தாய்தந்தை சுற்றமெலாந் தன்கணவ னேயென்ன
வாய்ந்தறிந் தன்னவனை யாதரித்—தேய்ந்தபணி
யிட்டபடி செய்யா திடுக்கண்செய் பாவிகடா
மட்டையுரு வாவா ரயர்ந்து. (எரு)

விற்க மகிழ்ந்துதனை வெட்டிடற்குஞ் சம்மதித்தாள்
கற்புமணி சந்த்ரமதி காதலனார்—கற்புடையார்க்
குள்ளகுண மீதாகு முத்தமியே நாயகனைக்
கள்ளமறத் தெய்வமெனக் கா. (எசு)

காந்தன் றனையிழந்த கற்புடையார் கால்பேர்த்துச்
சாந்தனையு மெங்குமே தாஞ்செல்லார்—மாந்தர்தாம்
பார்த்தாலும் பாரார் பகர்ந்தாலுந் தாம்பகரார்
கார்த்துன்பா ரோர்வேளை காண். (எஎ)

ஆள னிறந்தா லணிவாளோ வாடையணி
யாளன் றனையரனு வாய்ந்தறிந்தா—ளாளனையே
சாயை வடிவாச் சதாசினைந் தர்ச்சித்து
மாயைமனம் போக்குவாள் மற்று. (எஅ)

பதியிறந்த பின்னே பதிவடிவைப் பாரி
நிதிகாப்பார் போல நினைந்து—நதியாடி
யல்லும் பகலு மகம்புறமா வர்ச்சித்துச்
சொல்லற்று நிற்பாள் துணிந்து. (எகூ)

வெற்றிலையைத் தின்று விதம்விதமா வாடைகட்டி
நற்பூ ணணிந்தழகா நாயகனை—யற்புற்று
வாழ்ந்தா ரவனிறந்தால் வாளா விராராயின்
வீழ்ந்தார் நரகில் விரைந்து. (அ0)

விதவைசிர முண்டித்து வெண்டுசு கட்டி
நிதமு மொருவேளை நேரா—யிதம்விட்
டரைவயிறுய் வெற்றன்ன மன்பாக வுண்டு
தரையிற் படுத்தனெறி தான். (அக)

குருபத்தி கொண்டு குவியா மனத்தோர்
தெருச்சுற்றிச் சீர்குலைவ தேபோல்—புருடபத்தி
யில்லா விதவையர்க ளில்லம்விட் டுத்திரிந்து
பொல்லாங் குறுவார் புலர்ந்து. (அஉ)

வாயற் படிகடந்து வாராத பிச்சையுண்ணுர்
காய வெறுப்புடைய கண்ணுடையார்—தூய
பதியிழந்த போதுமே பாரார்வே றில்லம்
பதிபத்திப் பாவையர்கள் பார். (அஙு)

ஈசனென நாயகனை யேத்தாத மங்கையரைக்
காசடர்ந்த நாய்கள் கடித்திடவே—பாசநமன்
காய்ந்த மணலதனைக் காயமுழு துந்தூவித்
தீய்ந்திடவே செய்வான் செயிர்த்து. (அச)

பத்தா வருந்தப் பழிகூறும் பாவிகளைக்
குத்தி நமன்றூதர் கூரார்ந்த—கத்தியினல்
வெட்டி வதைசெய்து வேகவைப்பார் தீயதனின்
மட்டியெரு தொத்தாண் மதி. (அரு)

சாமியென நாயகனைச் சாற்றக்கூ சும்பெண்ணை
நேமிதனுற் கூற்றுவன்ரு னேராகச்—சாமியெனச்
சொல்லாத வாய்கிழித்துத் துப்பியே தூதர்களா
னல்லாய் நறுக்குவிப்பான் நாடு. (அசு)

தாலி தரித்தோனைச் சாமியென வேத்தாதார்
கூலி கொடுத்தாளைக் கூப்பிட்டு—நீலியவ
ளென்மேல் வரவுடுக்கை யேந்தி யடித்தண்ழமி
னென்பா ரிவர்மடமை யென். (அஎ)

ஈசனடி யார்க்கன்ன மிட்டுண்ணு மங்கையர்கள்
மாசகலா துண்டெனவே மாமாரி—தேசத்தில்
கற்பித் தருச்சிப்பார் கண்டார் நகைத்திடவே
யெற்றுக் கிவர்பிறந்தா ரிங்கு. (அஅ)

கட்குடித்த வாய்நாறக் கண்டபடி பாட்டிசைத்துக்
கொட்டி யுடுக்கைதனைக் கூவியே—மட்டிகடாம்
பற்றுள்ள மங்கையர்மேற் பட்சத்தால் வாடைவைப்பார்
சற்றுமறி வில்லாத தால். (அசு)

கொண்டானைத் தெய்வமென்று கும்பிட்டுப் போற்றுமற்
கொண்டை யவிழ்ந்தலையக் கூத்தாடி—யெண்டிசையுங்
கண்டார் சிரித்திடவே கற்பழிந்து நிற்கின்ற
சண்டிகளுக் கென்சொல்வேன் றூன். (கூ0)

மாந்தளிர்போன் மேனி மனையைக் குடியர்முன்
கூந்த லவிழ்த்தாடக் கூறுவது—மீந்தருக்கு
நீதியோ வில்லானை நீடவையி னிற்கவிட
லாதிமறை கூற்றோ வறை. (கூக)

விதிவழியே போகுமதி யென்பார் விகற்பர்
விதிமதியை யாய்ந்தால் வெளியா—மதியீர்
விதியென்று பெண்கடமை விட்டுப்பே யாட்டிச்
சதிசெய்த னீதியோ சார்ந்து. (கூஉ)

ஆள னிளைத்திருந்தா லாடுவர்பேய் மங்கையர்க
ளாள னிளையானே லாடார்க—ளாளன்
குணமறிந்தே மெல்லியர்கள் கூறுபட நிற்பர்
கணமறிந்துஞ் செல்வர் கதித்து. (கூங)

படைக்க வகையறியார் பத்தினியைப் பாரிற்
கடைக்குலத்தார் போலெவருங் காண—நடைக்கையின்றிப்
பம்பையடித் துப்பாடும் பாமரர்முன் னூட்டுவித்து
வம்பையிழுப் பாரீதோ மாண்பு. (கூச)

பூசாலி பொய்யாலோ போகுநோய் பூவைநீ
பூசாலி யென்பாரைப் பூமிதனின்—மாசார்ந்த
பேதையரை யேமாற்றிப் பேயாட்டிப் பற்பலவா
வாதைசெயுங் கூற்று மதி. (கூரு)

அறிவை மயக்கி யறிவிலரை யாட்டல்
வெறிகுணபூ சாலிக்கு வேலை—யறிவில்லாப்
பேதையரை யேமாற்றிப் பேயாட்டும் பூசாலிப்
பேதையே பேயென்று பேசு. (கூசு)

தேங்காய் பழந்தெசமா தின்னப் பதிநிறுத்தி
யோங்காரம் போட்டுப்பே யோட்டுகின்ற—வாங்காரந்
பூசாலி சொல்லாற் புருடனுரை தட்டாதீர்
மாசார்ந்த மங்கையரே வந்து. (௯௭)

ஆடுபன்றி கோழிகளை யஞ்சாது வெட்டியறுத்
தோடும் பிரம்புமே யுண்மையென—நாடுமென்று
புண்ணியம்போற் பாவமதைப் போதிப்பான் பூசாலி
வண்ணநலீ ராய்விரிதை,வாய்ந்து. (௯௮)

பேதைமையே பேயாகும் பெண்களுக்கென் றேனறியாய்
பேதைமையைப் பேயென்னும் பேதையர்பான்--மாதரைநீ
காட்டிக் கொடுக்கின்றாய் கைப்பிரம்பி னாலடிக்க
வாட்டுங்கைப் பொம்மைகளோ வாய். (௯௯)

பத்தாவின் பத்தியுற்றாற் பற்றுமோ பேய்பூதம்
பத்தாவைப் போற்றாத பாவையரே—பத்தா
திரிமூர்த்திக் கும்மேலாந் தெய்வமெனப் போற்றி
னுரிமைக் கதிபெறலா முற்று. (௱)

உட்கோ ளுரைத்தல்.

பன்னியர்தம் பண்பெல்லாம் பாடவா காதெனினு
மென்னா லியன்ற தியம்பினேன்—னின்னொருகால்
கத்தனருள் கூட்டிற் கழறுவ னேனையவை
சுத்தியுறப் பெண்க டுணிந்து.

வாழி.

பூவாழி நாயகன்சொல் போற்றுகின்றோர் தாம்வாழி
ஆவாழி நல்ல வறம்வாழி—கோவாழி
வாழி மறையுணர்ந்தோர் வாழியிந் நூலென்றும்
வாழியென் றாசான் மகிழ்ந்து.

கற்புவிளக்கம்
முற்றிற்று.

அறிக்கை.

இந்நூலாசிரியர் இயற்றிய புத்தகங்கள்.

	ரூ.	அ.	பை.
போதவிளக்கம்	0	2	0
சொரூபாநந்தவிளக்கம்	0	1	0
அநுபவாநந்தவிளக்கம்	0	1	0
சாமிவிளக்கம்	0	1	0
திருவள்ளுவர் தோத்திரவிளக்கம்	0	1	0
கற்புவிளக்கம்	0	3	0

ஷை புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்.

1-ரிப்பன்பிரஸ், சென்னை.

2-கலாரத்நாகரம்பிரஸ், சென்னை.

3-சச்சிதாநந்தம்பிரஸ், கோமளேசுவரன்பேட்டை, சென்னை.

4-தே-அ-சாமி குப்புசாமி அவர்கள்
சதாநந்தவிலாசம்,
25-நெ, வெங்கடேசபத்தன்வீதி,
பெருமாள்பேட்டை, புரசை, சென்னை.

பரிசோதனைப் பத்திரம்.

பாட்டு	வரி	பிழை	திருத்தம்
1	3	பர்த்தா	பத்தா
2	4	ர்களும்போற்ற வாழ்வார்.	அண்டருலகம்மி ளிர்வா ரார்ந்து.
29	1	றிட்டாலுங்	றிட்டுங்

தனியன்.

எண்சீர்விருத்தம்.

பூமிவிளக் காஞ்சென்னைப் புரசைநகர் தனிலே
    பொங்குபுகழ் சனகன்போற் போகமெலாந் துய்த்துக்
காமியுளக் கண்ணறியாக் கனிவொடன தானங்
    கைம்மாறு வேண்டாத காரதுபோற் செய்து
தேமினிய விளக்கமெனுங் கவின்பெறுநூ லாறு
    செய்தளித்த சிவாநுபவச் செம்மலெனு மெங்கள்
சாமிகுப்பு சாமியெனுஞ் சற்குரவன் பாதஞ்
    சந்ததமுந் தஞ்சமெனச் சிந்தனைசெய் வாமே.